இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு நியமமொன்றினால் வேண்டப்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றினை தவிர சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட கூடாது. எனினும், நிறுவகத்தின் மஹாபொல புலமைப்பரிசில் மற்றும் மாணவர் உதவுதொகை பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு தேறிய மீதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காணபிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி செயற்திட்டத்தால் நிறுவகத்தின் இரசாயன ஆய்வுகூடத்தை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 6,250,000 தொகையான மூலதன தன்மையிலான செலவினம் கணக்குகளிலிருந்து முற்றாக கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரியிலிருந்து மூலதன மானியமாக கிடைத்த பணத்தில் மீண்டெழும் தன்மையான செலவினமொன்றான ஊழியர் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 590,198 தொகை உரிய நிதியேற்பாட்டிலிருந்து பதிவழிப்பதற்குப் பதிலாக தொடர்ந்தும் நடைமுறையல்லா சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 756 | ரூபா 14,209,200 கிரயமான வாசிகசாலை புத்தகங்கள் தொடர்பில் முறையான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், 2013 ஆம் ஆண்டின் பின்னர் மெய்மையாய்வொன்று |

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) | 2000 யூன் 14 ஆந் திகதிய 87(i) ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | மேலதிக நேர படிகளை செலுத்துதல் மாதமொன்றிற்கு 20 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதும், அந்த எல்லையினை மீறுவதற்கு அமைச்சின் செயலாளரின் குறித்துரைக்கப்பட்ட அதிகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் 05 மாதங்களுக்கான மேலதிக நேர படிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளில் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மிகைத்து 6,498 மணித்தியாலங்களுக்காக ரூபா 461,125 தொகையான பணம் மேலதிக நேர படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 (vii) | நிறுவகத்தின் பணிப்பாளர் பதவி முழு நேர பதவியொன்றான போதிலும், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள பேராசிரியரொருவர் நிறுவகத்தின் உரிய அதிகாரியாக பணிப்பாளர் பதவியில் கடமைகளை மேவுகை செய்வதற்காக மாதாந்தம் ரூபா 180,000 தொகையான கௌரவ கொடுப்பனவின் அடிப்படையில் 2015 மே 25 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்த உத்தியோகத்தரின் சேவை நீடிப்பு செய்யப்பட்டவாறு இருந்தது. மேலும், குறித்த உத்தியோகத்தர் முழு நேரமாக இந்த நிறுவனத்தில் தங்கியிருப்பதில்லை என 2016 ஒக்தோபர் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் |

வெளிப்படுத்தப்பட்டது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 13,478,657 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13,524,703 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 27,003,360 இனால் அதிகரித்திருந்தது. ஆண்டிற்கான செலவினம் ரூபா 5,004,066 இனால் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் மானியங்களின் பெறுவனவு ரூபா 36,000,000 இனால் அதிகரித்திருந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

முன்னைய நான்கு ஆண்டுகளினதும் மீளாய்வாண்டினதும் நிதி விளைவுகளை கருத்திற் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் பற்றாக்குறையொன்றினை காட்டியிருந்த போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஊழியர் ஊதியம் மற்றும் ஏனைய சீராக்கங்களை மேற்கொண்டதன் பின்னர் தொடர்ச்சியாக அதிகரிக்கும் பங்களிப்பொன்று பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கூட்டப்பட்ட பெறுமதி ரூபா 191,089,508 ஆக இருந்ததுடன், 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டிற்கான கூட்டப்பட்ட பெறுமதி ரூபா 8 மில்லியன் அல்லது 4.8 சதவிதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. கல்விசார் செயலாற்றல்

கல்விசார் துறைகளில் உயர் கல்வியினை வழங்குதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் பணி நிறுவகத்தின் பிரதான நோக்கமாவதுடன், செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) மாணவர்களை இணைத்துக் கொள்ளல்

(i) நிறுவகத்தில் காணப்படும் வளங்களின் பிரகாரம் வருடமொன்றிற்கு 120 மாணவர்களை இணைத்துக்கொள்ள அந்த நிறுவகத்தில் வசதிகள் காணப்பட்ட போதிலும், 2013/2014 கல்வியாண்டின் போது 85 மாணவர்களும், 2014/2015 ஆம் கல்வியாண்டின் போது 72 மாண்வர்களும், 2015/2016 ஆம் கல்வியாண்டின் போது 67 மாணவர்களுமாக, குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே நிறுவகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ii) நிறுவகத்தினால் ஆண்டு தோறும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டிற்கான மாணவரொருவருக்கான கிரயம் ரூபா 575,413 எனும் கூடிய பெறுமதியினை கொண்டிருந்தது.

(ஆ) ஆராய்ச்சி உதவிகள் மற்றும் பயன்பாடு

பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளை வெளியிடுதல் மூலம் பல்கலைக்கழகத்தினை உயர்ந்த நிலைக்கு மற்றும் தரமான நிலைக்கு கொண்டுவரலும், இவ் ஆராய்ச்சி நூல்களை பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்தலும் தேசிய ரீதியாக முக்கியமானதொரு விடயமாகும்.

நிறுவகம் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன.

(i) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்விக்கான தேசிய நிறுவனம் ஆகியவற்றால் பேராசிரியர் பட்டங்களுக்காக வழங்கிய மானியங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 594,046 ஆன மீதி காணப்பட்டது. 2009/2010 ஆண்டுகளில் 04 ஆராய்ச்சிகளை அமுல்படுத்துவதற்காக ரூபா 3,311,450 தொகையான பணம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த 04 ஆராய்சிகளும் 06

வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இது வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நிறுவகத்தின் ஆண்டறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டில் 73 ஆராய்ச்சி வெளியீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் வெளியீடுகளின் தொகுப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை 46 ஆகும்.

(இ) நிறுவகத்தினை பல்கலைக்கழகமொன்றின் தரத்திற்கு தரம் உயர்த்துதல் மற்றும் இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 25 சதவீதத்தால் அதிகரித்தல் ஆகிய இலக்குகளை நிறுவகத்தால் அடைய முடியாது போயிருந்தது.

(ஈ) நிதியத்தின் பயன்பாடு

பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்றுவதற்காக அரசினால் மானியம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மூலதன மானியங்களில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவான மானியம் உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்படாத மூலதன மானியங்களின் பெறுமதி ரூபா 204,868,277 ஆக இருந்ததுடன், அந்த நிலைமை கடந்த காலப்பகுதி முழுவதும் நிலவியமை பின்வரும் அட்டவணை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

| | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| முன்கொண்டுவரப்பட்ட செலவிடப்படாத மூலதன மானிய மீதி | 17,981,951 | 36,479,414 | 77,637,499 | 104,747,888 |
| ஆண்டுக்கான பெறுவனவு | 50,650,000 | 114,400,000 | 97,095,500 | 145,245,000 |
| | 68,631,951 | 150,879,414 | 174,732,999 | 249,992,888 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டினுள் செலவிடப்பட்ட செலவினம் | 32,152,537 | 73,241,915 | 69,985,111 | 45,124,611 |
| ஆண்டின் இறுதியில் செலவிடப்படாத மூலதன மானியங்களின் மீதி | 36,479,414 | 77,637,499 | 104,747,888 | 204,868,277 |

(ii) கடந்த 04 ஆண்டுகளில் அரசினால் ஒவ்வொரு செலவினத் தலைப்புகளுக்காகவும் மூலதன மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், சில செயற்பாடுகள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் நிலவியமை கீழ்வரும் அட்டவணையின் மூலம் உறுதிப்படுத்தப்படுவதுடன், அதன் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட மூலதன செயற்திட்டங்களை நிறைவு செய்வதற்கோ அல்லது சொத்துக்களை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு கொண்டுவருவதற்கோ இயலாமல் போயுள்ளதாகவும், அதன் காரணமாக அரசின் நிதி விளைவற்று ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது.

| செலவினத் தலைப்பு | கடந்த 04 ஆண்டுகளினதும் மூலதன மானிய பெறுவனவு | கடந்த 04 ஆண்டுகளினதும் செலவினம் | செலவிடப்படாத மூலதன மானியம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| முன்கொண்டுவரப்பட்ட மூலதன மானிய மீதி | | | 17,981,951 |
| மூலதன சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்தலும் | 42,650,000 | 55,690,377 | (13,040,377) |
| கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் செய்திப் பத்திரிகை நாளிதழ்கள் | 106,845,000 | 55,963,171 | 50,881,829 |
| கட்டிட நிர்மாணம் | 256,395,500 | 108,260,427 | 148,135,073 |
| ஏனைய | 1,500,000 | 590,198 | 909,802 |

| | |
|---|---|
| 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவிடப்படாத மூலதன தொகை | 204,868,277 |

- இவ்வாறு அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட பணத்தை உரிய செயற்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு பதிலாக குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

- ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 தொகை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் ரூபா 590,198 ஆகும். எஞ்சிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கோ அல்லது மீதியை திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கோ நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- கல்விசார் கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன நிதியேற்பாடுகளில் ரூபா 126,476,734 தொகை ஒப்பந்த நிர்வாகத்திலான நலிவுகளின் காரணமாக நிர்மாணங்கள் தாமதமடைந்தமையால் எஞ்சியிருந்ததுடன், மீளர்வாண்டின் இறுதியிலான அதன் நிர்மாண செயன்முன்னேற்றம் 35 சதவீதமாகும்.

(ஈ) விளையாட்டு நிதியம் ரூபா 279,780 தொகை மற்றும் ஆராய்ச்சி நிதியத்தின் ரூபா 779,825 தொகை ஆகியன ஆண்டு முழுவதும் எதுவித செயற்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 செப்தம்பர் முதல் திசெம்பர் மாதம் வரை கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 212,730 பெறுமதியான 384 புத்தகங்கள் 2017 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் மாணவர்களின் பாவனைக்காக வழங்குவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டிராததுடன், அந்த அனைத்து புத்தகங்களும் பெறுகைப் பதிவேட்டிலேனும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பட்டதாரி மாணவர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆயுர்வேத மருத்துவ பட்டதாரி மாணவர்களின் பஞ்ச கர்ம பயிற்சி நடவடிக்கைகளுக்காகவும் கணினி இயலுமை தொடர்பான ஆற்றல்களை விருத்தி செய்வதற்காகவும் ரூபா 3,000,000 தொகை 2010 ஒக்தோபர் 18 ஆந் திகதி பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒதுக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த கணக்கில் ரூபா 1,214,142 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டினுள் பஞ்ச கர்ம பயிற்சி நடவடிக்கைகளுக்காக பணம் செலவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஈட்டப்பட்ட நிதியக் கணக்கின் காசு மீதிப் பரிசோதனையின் போது ஆண்டு முழுவதும் மாதாந்தம் சுமார் ரூபா 13,266,549 ஆன காசு மீதியொன்று பேணிச்செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 திசெம்பர் 12 ஆந் திகதி உயர் கல்வி அமைச்சினால், அரசாங்க மொழிக் கொள்கையை உத்தியோகத்தரிடையே அமுல்படுத்துவதற்காக ரூபா 475,000 தொகையான பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாமல் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 436,200 ஆன மீதியொன்று குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணி 46 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணி 34 ஆகும். 05 பேராசிரியர்கள் 2016 ஆம் ஆண்டின் போது ஏழு வருட விடுமுறையினைப்

பெற்றிருந்தமையால் கல்விசார் பதவியணியின் வெற்றிடங்களுக்காக தற்காலிகமாக 14 விரிவுரையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) நிறுவகத்தின் புதிய நிர்மாணங்கள், பராமரிப்பு செயற்பாடுகளின் போது மதிப்பீடுகளை தயாரித்தல், அளவிடைப் பத்திரங்களை தயாரித்தல், பற்றுச்சீட்டுக்களை பரிந்துரைத்தல் போன்ற பல்வேறு பணிகளுக்காக பல வருடங்களாக நிறுவகத்தால் தற்காலிக வேலை பொறியியலாளர்களில் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகள் பதிவேட்டிலுள்ள வேலை பொறியியலாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தின் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 04 பிரதான இலக்குகளின் கீழ் 19 நோக்கங்களை கொண்ட 188 பிரதான பணிகள் உள்ளடங்களாக தயாரிக்கப்பட்ட உபாயமார்க்க முகாமைத்துவ திட்டத்தில் மிளாய்வாண்டினுள் நிறைவேற்றப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தெளிவான விளக்கத்துடனான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் என்பவற்றை பரிசீலனை செய்யும் போது வருமானம் ரூபா 3,749,437 இனால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் நடாத்தப்பட்ட இயன்முறை மருத்துவ கலாநிதிப் பட்ட பாடநெறி மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிராமை இதற்கான பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) அனைத்து சொத்துக்களும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>(ii) வாசிகசாலை புத்தகங்கள் பௌதீக ரீதியில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அனைத்து புத்தகங்களையும் பெற்றுக்கொண்டவுடன் ஏற்புப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக எதிர்வுகூறப்பட்டிருக்கவில்லை. |

**ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

ஜீடப்ஏஜ/ஏசீ7/கணக்காய்வு-2016 ஏஎச்ஈ/டீ/ஈ/ஜீடப்ஏஜ/1/16/03 2017.10.03

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்,
இல. 306/72,
பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**கம்பஹா விக்கிரமாரச்சி ஆயர்வேத நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 1978 ஆம் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108 (1) உட்பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேற்கூறப்பட்ட விடயம் தங்களால் அனுப்பப்பட்ட 2017.05.09 ஆம் திகதிய ஏஎச்ஈ/டீ/ஈ/ஜீடப்ஏஜ/1/16/03 ஆம் இலக்க கம்பஹா விக்கிரமாரச்சி ஆயர்வேத நிறுவகத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்புடையது.

அவ்வறிக்கையை உள்ளடக்கிய அவதானிப்புக்கள் 22.09.2017 ஆம் திகதி நடைபெற்ற இந்நிறுவகத்தின் 249 ஆவது முகாமைத்துவச் சபையின் கூட்டத்தில் ஆராயப்பட்டு பின்வரும் விளக்கம் வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுத் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்**

---------------------------------------------------------------------------------------------------------------

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---------------------------------------------------------------------------------------------------------------

**1.4 தரப்படுத்தல் எண்ணக்கரு மீதான எடுகோள்**

---------------------------------------------------------------------------------------------------------------

**2 நிதிக்கூற்றுக்கள்**

---------------------------------------------------------------------------------------------------------------

**2.1 தரப்படுத்தல் எண்ணக்கரு**

---------------------------------------------------------------------------------------------------------------

**2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------

2.2.1 **இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்கள்**

---

**இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமம் 01**

மஹாபொல மற்றும் புலமைப் பரிசில் கிடைக்கப் பெறுவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவினால் தாமதமாகும் சந்தர்ப்பத்தில், நிறுவன நிதி மூலம் அந்த மஹாபொல மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அந்நிதியினை மீள்நிரப்புவதற்கு பிறிதொரு பேரேட்டுக் கணக்கிளைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டு முதல், கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக் காட்டப்பட்டவாறு வருமானச் செலவுக் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்கிறோம்.

2.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) இது நாளேட்டு இலக்கம் 2017/57 மூலம் திருத்தப்பட்ட பின்னர் உரியவாறு கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது அந்தப் பெறுமதி மனிதவளச் சொத்தாக புத்தகங்களில் கணக்கீட்டிற்குட்படுத்தப்பட்டதுடன் சொத்துப்பெறுமதி குறைத்தல் அடிப்படையில் அதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.3 **சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

(அ) **இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 756**

2008,2009 மற்றும் 2013 ஆண்டுகளில் வாசிகசாலைப் புத்தகங்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளன. தற்போது வாசிகசாலையிலுள்ள அனைத்துப் புத்தகங்களையும் கணக்கெடுத்து, KOHA மென்பொருள் கட்டமைப்பிற்கு உட்புகுத்தும் பணி நடைபெற்று வருவதுடன் அது இறுதி கட்டத்தை அடைந்துள்ளது என்பதை அறியத் தருகிறோம். அது முடிவடைந்ததன் பின்னர் நிதி ஒழுங்குவிதி 756 இன் படி, முறையாகக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

(ஆ) **2008 யூன் மாதம் 14 ஆம் திகதிய 87 (i) ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2002.02.06 ஆம் திகதி வெளியிடப்பட்ட நிருவாகச் சுற்றறிக்கை 9/2002 இன் படி உயர்கல்வி நிறுவனப் பயனாளிகளின் வேண்டுகோள் கருத்திற் கொள்ளப்பட்டு மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளரால் விசேட சந்தர்ப்பங்களில் விசேட சேவைகளில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவினை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் படி, மேலதிக வேலை நேரக் கொடுப்பனவினை வழங்குகையில், நிறுவன வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு

செலவுத் தலைப்பு 75% எல்லையினுள் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவினை வருடத்தினுள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சில அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மேலும் அறியத் தருகிறோம்.

**(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 எனும் இலக்கம் கொண்ட அரசாங்க வியாபாரச் சுற்றறிக்கை 9.3.1 (iii)**

அமைச்சரினது அங்கீகாரத்தினடிப்படையில் பணிப்பாளர் (உரிய அதிகாரங் கொண்ட) பதவியில் பதிற்கடமை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் காலப்பதியில் நிறுவன நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன என அறியத் தருகிறோம். 2017.09.27 ஆம் திகதி முதல் புதிய பணிப்பாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு முன்னர் காணப்பட்டுள்ள நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**3. நிதி மீளாய்வு**

--------------------------------

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

------------------------------------

**3.2 திட்ட மீளாய்வு**

------------------------------

**4.1 கல்விச் செயன்முன்னேற்றம்**

--------------------------------------------------

**(அ) மாணவர்களை சேர்த்துக் கொள்ளல்**

(i), (ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பதிவிற்காக மாணவர்கள் இந்நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பார்கள். இந்நிறுவனத்திற்கு வருடாந்தம் 120 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வசதிகள் காணப்பட்ட போதிலும், அவசியமான எண்ணிக்கையிலான மாணவர் பதிவு நடைபெறுவதில்லை.

**(ஆ) ஆய்வு மானியங்களும் பயன்பாடும்**

(i) இக்கல்வி நிறுவனகத்தின் விரிவுரையாளர்களின் பட்டப்பின் படிப்புக் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு இந்நிறுவனம் மூலமும் NCAS மூலமும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலமும் நிதி வசதிகள் வழங்கப்படுகின்றன. அந்நிதியுதவியைப் பெற்றுப் பட்டப்படிப்பு மேற்கொண்ட இரண்டு விரிவுரையாளர்கள் தமது பட்டப்பின்படிப்பு ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்துள்ளர்.

ஏனையோர் தமது கல்வி நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளனர் என்பதையும் அறியத் தருகின்றோம்.

(ii) இது தொடர்பாக கல்விசார் ஆளணியிரைத் தெரியப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றோம்.

(இ) 2016 ஆம் ஆண்டு அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயற்பாடுகள் உள்ளடக்கிய செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பின்பு, 'இந்தக் கல்வி நிறுவனத்தை பல்கலைக்கழக அந்தஸ்துடையதாகத் தரமுயர்த்துதல்' எனும் எண்ணக்கரு விலகிச் சென்றுள்ளது. ஆகையால், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இலக்கினை அடைய முடியாதுள்ளது. தற்போது குறித்த செயற்றிட்டம் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**(இ) நிதிப் பயன்பாடு**

-----------------------------

(i), (ii) மாணவர் நிலைய கட்டடம், கல்விக் கட்டடம், நிருவாகக் கட்டடம் ஆகிய கட்டடங்களின் நிருமாணப் பணிகள் முடிவுறுத்தப்பட்டு வருவதுடன், இதுவரை முடிவடைந்த பணிகளுக்கான பற்றுச் சீட்டுக்கள் கிடைக்கப் பெறாமையால் அதற்குரிய நிதி இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. ரூ. 134 மில்லியன் பெறுமதியான நிருவாகக் கட்டடமானது 2017 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் வேலை முடிவுறுத்தப்பட்டு நிறுவகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதுடன் அதற்குரிய கொடுப்பனவுகளுக்கான பணமும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. இக்கட்டடங்களுள் அநேகமானவை இவ்வருட இறுதியினுள் நிருமாணிக்கப்பட்டு முடியும் எனும் இயலுமை காணப்படுவதால் அநேகமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்வரும் நாட்களில் இந்நிதி பயன்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஈ) வெளிவாரிக் கற்கைநெறிகள் மூலமாக உழைக்கப்பட்ட வருமானத்திலிருந்து ஒதுக்கப்பட்ட விளையாட்டு நிதி மற்றும் ஆராய்ச்சி நிதியானது தேவையான போது மாணவர்கள் மற்றும் பணியாட்டொகுதியினரின் விளையாட்டு மற்றும் ஆராய்ச்சித் தேவைகளுக்கு செலவளிக்கப்பட வேண்டி ஏற்பட்டதுடன் இவ்வாண்டில், அந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என அறியத்தருவதுடன் குறித்த நிதியங்கள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகிறோம்.

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

-------------------------------------------------------

(அ) பொதுப் பதிவேட்டில் பதியப்படாத புத்தகங்களை வெகுவிரைவில் பொதுப் பதிவேட்டில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கருத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள நிதியினை முறையான ஏற்பாடுகளின் கீழ் பயன்படுத்துவதற்குரிய விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை அறியத் தருகிறோம்.

4.3 குறைவான நிதிப் பயன்பாடு

(அ) நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட நிதிக் கணக்கு மீதியானது தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

(ஆ) அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்துவதற்காக போதனாசிரியர்களை வழங்குமாறு அரசகரும மொழிகள் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். எனினும், தற்போது அத்திணைக்களத்தினால் போதனாசிரியர்களை வழங்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் அவசியமான போதனாசிரியர்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறியத் தருகின்றோம்.

4.4 பணியாட்டொகுதி நிருவாகம்

(அ) கல்விசார் பணியாட்டொகுதியில் வெற்றிடங்கள் நிலவும் போது, இக்கல்வி நிறுவகத்தில் கல்வி கற்று உருவாகும் பட்டதாரிகளில் விசேட திறமையை வெளிப்படுத்திய மாணவர்களை கல்விசார் பணியாட்டொகுதியில் உள்வாங்குவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் முகமாகவும் அது தொடர்பாக மாணவர்களின் ஆர்வத்தை மேம்படத்துவதற்காகவும் காணப்படும் வெற்றிடங்கள் சகலவற்றையும் ஒரேயடியாக நிரப்பாத சந்தர்ப்பங்களில் அவ்வெற்றிடங்கள் படிப்படியாக நிரப்பப்படும். அவ்வாறே அப்பதவிகளுக்கு முதலாவது சந்தர்ப்பங்களில் தற்காலிகமாகவே ஆட்சேர்ப்புச் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள என்பதையும் அறியத் தருகின்றோம்.

(ஆ) நிறுவகத்திற்குப் பொறியியலாளரொருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டது. அதில் பொருத்தமான ஒருவரை சேர்த்துக் கொள்ள முடியாது போனது. ஆகையால், மீண்டும் விண்ணப்பம் கோருவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

5 கணக்கீட்டு நடவடிக்கைகளின் தன்மையும் நல்லாட்சியும்

5.1 செயற்றிட்டம்

2016 ஆம் ஆண்டு நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கும் நோக்கம் மற்றும் செயற்பாடுகளை உள்ளடக்கிய செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் இச்செயற்றிட்டம் தேவைக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது.

5.2 **பாதீட்டின்படியிலான நிருவாகம்**

---

உடற்பயிற்சியியல் கலாநிதிப் பட்டப்படிப்பிற்காக குறைந்த பட்ச மாணவர் எண்ணிக்கை காணப்படாமையால் 2016 ஆம் ஆண்டில் அப்பாடநெறியை நடாத்த முடியாது போனது. அதுவே இக்குறைபாட்டிற்குக் காரணமாகும்.

6 **கட்டமைப்பும் நிருவாகமும்**

---

**(அ), (ஆ) கணக்காய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்ட சொத்து நிருவாகம், பாதீட்டு நிருவாகம் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, உரியவாறு பராமரித்துச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத் தருகின்றோம்.**

வைத்தியர் எஸ். டீ. பிலபிட்டிய

பணிப்பாளர்

பிரதிகள்- செயலாளர்- உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

தலைவர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

உபவேந்தர்- களனிப் பல்கலைக்கழகம்

செயலாளர்- நிதி அமைச்சு

ගම්පහ වික්‍රමාරච්චි ආයුර්වේද විද්‍යායතනය - ශ්‍රී ලංකාව

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம - இலங்கை

Gampaha Wickramarachchi Ayurvede Institute - Sri Lanka

gwai.kln.ac.lk